SS DIGITAL'S
Specialist in Digital Colour Printing
அச்சுத் தேவைக்கான தீர்வு
நியாய விலையில், விரைவான மற்றும் தரமான சேவை.
அனைத்து விதமான அச்சிடல் வேலைகளும்
A6,A5,A4,A3
கலர் லேசர் பிறின்டிங், கலர் போட்டோ கொப்பி
டைப் செட்டிங் & கிரபிக்ஸ் டிசைனிங்
உங்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதே
எமது ஒரே குறிக்கோள்
Con: 026-2224933, & ssdigitals.shan@gmail.com
No 58, Vidyalayam Road, Trincomalee.

JULY 29 , 2012

# மலைமுரசு

அறைவு 01 இயம் 01

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

MALAIMURASU

ஆடி மாதம் 14ம் திகதி

இலவசப் பிரதி

பிரதி ஞாயிறு தோறும்
திருமலையில் இருந்து
வெளியாகும் வார இதழ்

வெற்றியைத் தீர்மானிக்கப் போவது பலப்பரீட்சையா ? தந்திரோபாய நகர்வுகளா?

# திருமலைத் தேர்தல் களத்தில் பதினாறுக்குப் 16

திருக்கோணமலைத் தேர்தல் களத்தில் கட்சிகளின் சம அளவிற்கு வேட்புமனுக்களை சுயேட்சைக் குழுக்களும் தாக்கல் செய்துள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. உண்மையில் பதினேழு அரசியற் கட்சிகள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்த போதிலும் ஒரு அரசியற் கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப் பட்டமையால் சுயேட்சைக் குழுக்களுக்குச் சமனான எண்ணிக்கையில் அரசியற் கட்சிகளும் களத்திலிருக்கின்றன. சம எண்ணிக்கையான சுயேட்சைகள் பலப்பரீட்சைக்காக களத்திலுள்ளனவா அல்லது தந்திரோபாயத் நகர்வுகளுக்காக களமிறக்கப்பட்டுள்ளனவா என்பதை வரும் வாரங்களில் தெரிந்துகொள்ள முடியும். அப்பதினாறு அரசியற் கட்சிகளின்

(08ம் பக்கம்)

## ஐம்பத்தைந்து சுயேட்சைக் குழுக்கள் களமிறங்கும் தேர்தற்களமாக கிழக்கு மாகாண சபைத் தேர்தல்! சிதறடிக்கப்படுமா சிறுபான்மை மக்களின் வாக்குகள்?

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மட்டக்களப்பில் 21 சுயேட்சைக் குழுக்களும், திருக்கோணமலையில் 16 சுயேட்சைக் குழுக்களும், அம்பாறையில் 18 சுயேட்சைக் குழுக்களுமாக மொத்தம் 55 சுயேட்சைக்குழுக்கள் 3 மாவட்டங்களிலும் களமிறங்கியுள்ளன. இவை தாமாகத் தேர்தலுக்கு இறங்கியுள்ளனவா அல்லது திட்டமிட்டுக் களமிறக்கப்பட்டுள்ளனவா என்பது கேள்விக்குறியாகியுள்ளது.

(08ம் பக்கம்)

## உளவியல் யுத்தத்திற்குப் பலியாகிவிடுவார்களா திருமலைத் தமிழ் வாக்காளர்கள் ?

திருமலைத் தமிழ் வாக்காளர்களின் வாக்குப்பலத்தை ஒன்றுகுவிய விடாமல் தடுப்பதற்காகவே பெருமளவு சுயேட்சைக் கட்சிகள் தேர்தலுக்காக களமிறக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர் ஒருவர் மலைமுரசிற்குத் தெரிவித்தார். மக்களைக் குழப்ப நிலைக்குள் ஆழ்த்தி அவர்களின் வாக்குகளை சுயேட்சைகளிடையே பிரித்து விட்டால் அவ்வாக்குகள் வலுவற்று, எவற்றையும் சாதிக்காமல் வெறும் காகிதங்களாக மட்டுமே போய்விடும் என்பதைக் குறியாகக் கொண்டே பெரும் சக்தியொன்று இவ்வாறு திட்டமிட்டுச் செயற்படுவதாக அவர் தெரிவித்தார்.

(08ம் பக்கம்)

## அதியுயர் வெப்பநிலையில் திருமலை
### வரட்சியால் நாவறளும் மக்கள்....

வடகீழ் பருவக்காற்று மழைவீழ்ச்சி குறைந்ததால் திருக்கோணமலை மாவட்ட வெப்பநிலை அளவு கடந்து உயர்வதை வளிமண்டலவியல் திணைக்களம் பதிவுசெய்துள்ளது. 23ம் திகதி நாட்டின் அதியுயர்ந்த 37.0 பாகை செண்டிகிரேட் வெப்பநிலையைப் பதிவுசெய்த மாவட்டமாகத் திருக்கோணமலை காணப்பட்டுள்ளது. அத்துடன் அடுத்துவரும் 36 மணித்தியாலங்களுக்கான வானிலை எதிர்வு கூறலிலும் திருமலை மாவட்டமே அதிகூடிய வெப்பநிலையைப் பதியும் மாவட்டமாகக் காணப்பட்டுள்ளது.

(08ம் பக்கம்)

## வாக்காளர் அட்டைக்கு ஓர் விசேட தினம் - ஆகஸ்ட் 26



கிழக்கு, வடமத்திய, மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் தபால் திணைக் களத்துக்கு அனுப்பி வைக்கப் படவுள்ளதாகவும், ஆகஸ்ட் 17ம் திகதி

(08ம் பக்கம்)

## வணக்கம்

மலைமுரசின் ஊடாக உங்களுடன் பேசமுனையும் முதல் சந்தர்ப்பம் அமைவது மிகுந்த மனநிறைவையும், மட்டற்ற மகிழ்ச்சியையும் தருகின்றது.

இப் பத்திரிகையொன்றும் எமது நீண்டகாலக் கனவின் நனவுத் தோற்றமோ அல்லது எமது வாழ்வின் இலட்சியமோ அல்ல. ஆனால் இவ் வெளியீடு இக்காலத்தின் தேவையாக இருக்கின்றது என்பதும், நிரப்ப வேண்டிய மிகப்பெரும் இடைவெளியொன்றினை நிரப்பவென எழுப்பப்படும் கட்டுமானத்தின் ஓர் கல்லாக அமைகின்றது என்பதும் கண்கூடு.

நாம் கடந்துபோன பலநாட்களில் மிக அண்மையில் என்றோ ஓர் நிமிடம் உள்ளூர் பத்திரிகையொன்றின் தேவையை எமக்கு உணர்த்திற்று. அதன் அசைவியக்கமாக உங்கள் கைகளிலிருப்பதே மலைமுரசு ஆகும். இம்முரசின் அறைவு இன்று தொடங்கி உங்களின் விழியூடு செய்திகளை இயம்பும் பணியைத் தொடங்குகின்றது.

மலைமுரசின் பொறுப்பை அது நன்றாகவே உணர்ந்துள்ளது. சுதந்திரமான, பக்கச்சார்பற்ற உறுதிப்படுத்தப்பட்ட செய்திகளை உங்களிடம் எடுத்து வரும் கடமையையும் மலைமுரசு கொண்டுள்ளது.


உங்களின் பொறுப்பு யாதெனில் வாசகனாக மட்டுமே நீங்கள் இருக்காமல் தேவையேற்படும் போது மலைமுரசின் பத்திரிகையாளனாகவும் மாறவேண்டும் என்பதாகும். அதன்பால் உங்கள் பிரதேசச் செய்திகளை எமக்குத் தெரியப்படுத்தும் சேவையை நீங்களாகவே ஏற்றுக்கொள்வீர்கள் என மலைமுரசு நம்பிக்கை கொள்கின்றது.

ஒரு வரலாற்றுக் காலத்தை மலைமுரசு தாண்டும் நந்நாளில் நிச்சயமாக உங்களை முன்பக்கத்திற் சந்திக்கும் வரை......

அன்புடன்

ஆசிரியர்.

திருக்கோணமலையிலிருந்து வாராந்தம் ஞாயிற்றுக்கிழமைகளில்
வெளிவரும் மலைமுரசு பத்திரிகையில் உங்கள்
விளம்பரங்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், திருமண நாள் வாழ்த்துக்கள், சாதனையாளர் வாழ்த்துக்கள்,
மரண அறிவித்தல்கள், நினைவு நாட் குறிப்புக்கள், அந்தியேட்டி அழைப்பிதழ்கள், பெருநாள் வாழ்த்துக்கள்
போன்றவை இடம்பெற வேண்டுமா?
தொடர்புகளுக்கு
அலுவலகம்-159A,2nd floor,Sea view Road,Trincomalee. 077 018 0218
விளம்பர முகவர்- 58,Vidyalayam Road,Trincomalee. 077 366 3103



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் வாக்குகளை ஒருமைப் படுத்துவோம்

**EPRLF பத்மநாபா அணி தெரிவிப்பு.**

தமிழ் வாக்குகளை ஒருமைப் படுத்துவதற்காகவும் தமிழ் மக்களிடையே ஒற்றுமையை வலியுறுத்துவதற்காகவும் நடைபெற இருக்கின்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிக்கும் முடிவை எடுத்துள்ளதாக EPRLF பத்மநாபாஅணியின் திரு. சிவகுமார் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கின்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்துப் பாரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆகையால் எமது மக்களின் ஒற்றுமையையும், வாக்குகளையும் உறுதிப்படுத்தும் முகமாக இம்முடிவைத் தாங்கள் எடுத்ததாக சிவகுமார் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ் ஆதரவைத் தாம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் மற்றும் செயலாளருக்குத் தெரியப்படுத்தியிருப்பதுடன், முன்னால் திருமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரெட்ணசிங்கம் அவர்களுடனும் கலந்தாலோசித்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

எனினும் இச் செய்தியை உறுதிப்படுத்துவதற்காக மலைமுரசு திரு. துரைரெட்ணசிங்கத்தைத் தொடர்கொள்ள முயற்சித்தபோதும் அது கைகூடவில்லை.

## 37,000 ஆண்டுகளுக்கு முன்னரான இலங்கையின் மனிதப் பாரம்பரியச் சிதைவுகள் மீட்பு.

பகியங்கல மலைக் குகைகளிலிருந்து சுமார் 37,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மனித எச்சங்களையும் அக்கால மனிதர்கள் பாவித்த பொருட்களின் சிதைவுகளையும் அகழ்வாராச்சித் திணைக்களம் மீட்டுள்ளது. மனித எலும்புகள்,மட்பாண்டச் சிதைவுகள்,கரிக்கட்டிகள் போன்றவற்றுடன் மிருகங்களின் எலும்புகளும் மீட்கப்பட்டுள்ளன.

கரிக்கட்டிகள் அவற்றின் வயதைத் தெரிந்துகொள்வதற்காக வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள்,ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்றவற்றிற்கு அனுப்பப்பட்டுள்ளன.மேலும் மீட்கப்பட்ட மிருகங்களின் எழும்புகள் அக்கால மனிதர்கள் வேட்டையாடி வாழ்ந்தமைக்கான சான்றுகளாகவும், இறைச்சியை நெருப்பில் வாட்டி பதனிட்டமைக்கான பதிவுகளாக கரிக்கட்டிகளும் காணப்படுகின்றன.

இரத்தினபுரி மாவட்டத்தின் எல்லையிலமைந்துள்ள இக்குன்றுத் தொகுதி இன்னும் பல மனிதப்பாரம்பரிய ஆய்வுகளுக்கான பொக்கிசங்களைக் கொண்டிருக்கக்கூடும். எனினும் அவற்றை அறிவற்ற புதையல் தோண்டுபவர்களிடமிருந்து சிதைவுறாமல் பாதுகாப்பதென்பது சவாலாகவே இருக்கும்

## திருக்கோணமலை கிண்ணியா இடையே ஐந்து பேரூந்துகள் சேவையில்

திருகோணமலைக்கும் கிண்ணியாவிற்கும் இடையே தினமும் ஐந்து பேரூந்துகள் போக்குவரத்தில் ஈடுபடுமெனக் கிழக்கு மாகாண போக்குவரத்துப் பணிப்பாளருடனான சந்திப்பில் முடிவு எட்டப்பட்டுள்ளது.

திருக்கோணமலைக்கும் கிண்ணியாவுக்கும் இடையே முன்னொரு காலத்தில் 20ற்கும் மேற்பட்ட பேரூந்துகள் சேவையில் ஈடுபட்டனவாயினும் கடந்தவருடம் உப்பாறு,கங்கைத்துறை, இறால்குழி ஆகிய பாலங்கள் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து திருகோமலையில் இருந்து புறப்படும் பேரூந்துகள் கிண்ணியா நகரத்துக்குச் செல்லாமல் கிண்ணியா ஊடாக மூதூரைச் சென்றடைகின்றன. இதனால் கிண்ணியா நகரத்துக்குச் செல்லும் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

கிண்ணியா ஜம் இய்யதுல் உலமாசபைத் தலைவர், கிண்ணியா நகரசபைத் தலைவர், கிண்ணியா பிரதேச சபைத் தலைவர் உள்ளிட்ட குழுவினர் கிழக்கு மாகாணப் போக்குவரத்துப் பணிப்பாளருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## எமது கல்வியைச் சீர்குலைய விடக்கூடாது

**திருமலை நகரசபைத் தலைவர்**

எமது இனத்தின் எதிர்கால எழுச்சி எமது மாணவர்களின் கைகளில் தான் தங்கியுள்ளது. நீங்கள் தான் எமது இனத்தின் எதிர்காலத் தலைவர்கள் என திருகோணமலை நகரசபைத் தலைவர் க.செல்வராசா குறிப்பிட்டார்.

14.07.2012 சனிக்கிழமை காலை 09.00 மணிக்கு நகரசபை மண்டபத்தில் ஆரம்பமான மாணவர்களுக்கான வரலாற்றுக் கல்விக் கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்வியால்தான் எமது இனம் இன்னும் தலைநிமிர்ந்து நிற்கின்றது. நம் நிலத்தை, வளத்தை, பலத்தை, பண்பாட்டை கலாசாரத்தைக் கல்வியாலேயே வலிமைப்படுத்த முடியும். அதற்கான கடமைகளையும் உங்களையே சாரும் என்று திரு.க.செல்வராசா மேலும் குறிப்பிட்டார்.

## உபபொது நூலகக் குறைபாடுகளை நிவர்த்தி செய்க.....

கிளிவெட்டியின் உப பொது நூலகம் பல குறைபாடுகளுடன் இயங்கிக் கொண்டிருப்பதாக பொதுமக்கள் குறைப்பட்டுக் கொள்கின்றனர்.

இப் பொது நூலகம் மூதூர்ப் பிரதேசசபையினால் நிர்வகிக்கப்படுகின்றது. யுத்தகாலத்தில் கிளிவெட்டிப் பிரதேசக் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய இந் நூலகத்தில் தற்போது மாணவர்களுக்கான பாடப்புத்தக வசதிகளோ, பொதுப் புத்தகங்களோ, சஞ்சிகைகளோ காணப்படாமை பெரும் குறைபாடாகும் என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். மூன்று தேசிய பத்திரிகைகள் மட்டுமே இந் நூலகத்திற்குக் கிடைப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இக் குறைபாடுகளைக் களைய மூதூர் பிரதேசசபை உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிளிவெட்டியின் அறிவுடையோரும், மாணவர் சமூகமும் கோரிக்கை விடுக்கின்றனர்.

## திருக்கோணமலையில் மின்வெட்டு அமுல்...

மின்சார உற்பத்திக்கான நீர்த்தேக்கங்களின் நீரேந்து பிரதேசங்களில் பெய்யும் மழையின் அளவு குறைந்துள்ளதால் நாடு முழுவதும் மின் வெட்டு அமுல் படுத்தப்படுகின்றது.

இதன் விளைவாக திருக்கோணமலையிலும் தொடர்ந்து மின்வெட்டு அமுலாகும் என நகர மின்சார பாவனையாளர் சேவை நிலைய அலுவலர் தெரிவித்தார். எனினும் ஒரு நாளில் இரண்டு தடவைகள் மட்டுமே இம் மின்வெட்டு அமுலில் இருக்கும் எனவும் தெரிவித்தார். திருக்கோணமலை மாவட்டத்தில் முறையே மதியம் 1.00 தொடக்கம் 3.30 வரையும், இரவு 8.00மணி தொடக்கம் 8.45 வரைக்கும் இம் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் நேரங்கள் எனவும் அவர் கூறினார். ஆனால் 26ந் திகதி இரவு மின் வெட்டு அமுல்படுத்தப்படவில்லை என மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

## வேட்பாளர்களின் சித்திரங்களை வீதிச் சுவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டா.

தேர்தல் காலங்களில் வீதிகளையும், அண்டிய சுவர்களையும் வர்ணச்சாயங்களால் நாசப்படுத்துவதும், வேட்பாளர்களின் விபரங்களை வரைவதும் தேர்தல் திணைக்களத்தால் தடைசெய்யப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் வாகன நெரிசலுக்கிடையில் இவ்வாறான வர்ண வேடிக்கைகள் வீதி விபத்துக்களை ஏற்படுத்தும் சாத்தியமிருப்பதால் இவ் வேடிக்கைகளை தவிர்த்துக் கொள்ளுமாறு தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

இதனை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

## தேர்தல் வெறியாட்டங்களை முறையிட தனிப்பிரிவுகள்

மாகாணசபைத் தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைகளையும், வெறியாட்டங்களையும் தெரிவிப்பதற்காக தேர்தல்கள் செயலகத்தினால் தனிப் பிரிவுகள் தேர்தல் நடைபெறும் மாவட்டங்களின் மாவட்டச் செயலகங்களில் நிறுவப்பட்டுள்ளன.

**மலைமுரசுடன் இலத்திரனியல் தொடர்பாலை மேற்கொள்ள நீங்கள் அஞ்சலிட வேண்டிய முகவரி**

malaimurasu@hotmail.com

**செய்திகளை உடனுக்குடன் தெரிவிக்க**

0770 18 02 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிடலில் தோற்றுப் போய் இலக்கின்றி நகர்கின்றதா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (த.தே.கூ)

ஈழத்தமிழரின் தலைமைத்துவத்தைக் காலத் தேவையின் பால் ஏற்றுக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது ஒவ்வொரு நகர்வின் போதும் திட்டமிடலில் தோற்றுப்போய் விடுவதைப் போலவே உள்ளது.

படித்தவர்களாலும், புத்திசீவிகளாலும் நிரம்பிப்போயுள்ள இவ்வமைப்பின் சில செயற்பாடுகள் கடும் விமர்சனங்களைத் தோற்றுவிக்கின்றமை திட்டமிடலின்றிய நகர்வுகளின் வெளிப்பாடுகளே ஆகும்.

கிழக்கு மாகாண சபை கலைக்கப்படப் போகின்றது என்னும் தகவல் சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னரே கசிந்திருந்த போதிலும் இறுதிக்கணம் வரை வேட்பாளர்கள் தொடர்பாக எத் திட்டமிடலுமின்றி, வேட்பாளருக்கான பெயர்முனைவுகளும், தேர்வுகளும் நிகழ்ந்ததைக் குறிப்பிடலாம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சில வேட்பாளர்கள் தனிப்பட்ட நன்மைகளுக்காக பேரினவாதக் கட்சிகளின் பக்கம் சில காலங்கள் சாய்ந்துவிட்டு மீண்டும் கூட்டமைப்பிற்கு ஓடிவந்தவந்தவர்களாக இருப்பது பெரும் மனக்கிலேசங்களை மக்களிடம் ஏற்படுத்தியிருந்தது.



இவ்வகை நடவடிக்கைகளே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நகர்வுகள் திட்டமிடலின்றி இயங்குகின்றன என்பதையல்லவா வெளிக்காட்டி விடுகின்றன.

திட்டமிடல் தோல்வியின் முதற் காரணியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இலக்குகள் (Goals)அல்லது குறிக்கோள்கள் (Objectives) எவை என்பதை எவராலும் புரிந்துகொள்ள முடியாதிருப்பதைக் கொள்ளலாம். உலகமறிந்த ஓர் இனத்தின் தலைமைத்துவத்தைப் பொறுப் பேற்றிருக்கும் அமைப்பு தனது குறிக்கோள்களை இரகசியமாக வைத்திருக்கும் என்பது ஏற்றுக்கொள்ள முடியாதவிடயமாகும்.

இன்னும் அக் குறிக்கோள்கள் தெளிவாக வரையறுக்கப்படவில்லை என்ற உண்மையையே நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களும் தமிழ்த் தலைவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கினை (Vision) அதன் குறிக்கோளாகக் கொள்ள முனைவதும் இக்குழப்பத்திற்குக் காரணமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கமாக" ஈழத்தமிழருக்கு நிரந்தரமானதும் சமாதானமானதுமான சுயநிர்ணய உரிமை வாழ்வை அவர்களின் பாரம்பரிய நிலத்தில் உருவாக்கி அவர்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவித்து அவர்களையும் இவ்வுலகில் வாழும் சுதந்திர இனங்களைப் போல வாழ வைத்தல்" (குறிப்பு 1) என வரையறுக்கலாம்.

இதனையே அனைத்துத் தமிழ்த் தலைவர்களும் வேறுபட்ட குறுகிய தமிழ் வார்த்தைகளூடாகக் கூறி வந்திருந்தாலும் இந் நோக்கை அடைவதற்கான குறிக்கோள்களை வகுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவறியிருக்கின்றது.

ஒரு தனி அரசியற் கட்சியாகப் பதியப்படாது விட்டாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களினால் ஓர் தனிக்கட்சியாகவே நோக்கப்படுகின்றது. ஆனாலும் அது ஓர் நிறுவன அமைப்பு (Organization) என்பதையே அதன் கட்டுமாணிகள் புரிந்துகொள்ள வேண்டும். அந் நிறுவன அமைப்பு தான் அடைய நினைக்கும் குறிக்கோள்களை குறிப்பிட்டகால அளவுக்குள் அடைந்தால் மட்டுமே அதன் நோக்கத்தை நீண்டகாலத்தில் அடைந்து கொள்ளமுடியும்.

“இனப்பிரச்சனைக்கு ஓர் நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுப்போம்” எனும் தமிழ் அரசியல்வாதிகளின் சொல்லாடல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குறிக்கோளா? என்றால் இல்லை, அச் சொல்லாடல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பணிக்கூற்று வாசகம் என்பதே விடையாகும்.

அரசியல் முரசு

அவ்வாறாயின் குறிக்கோள்கள் என்றால் என்ன எனும் கேள்விக்கு இனப் பிரச்சனைக்கு ஓர் நிரந்தரத் தீர்வு **எது?** அதை **எவ்வாறு** எட்டப்போகின்றார்கள் என்பதே விடைகளாகும்.

தமிழருக்கென்று ஓர் தனியரசு அல்லது தமிழருக்கென்று ஒரு தனிநாடு அல்லது தமிழருக்கென்று சுயநிர்ணய உரிமையுடன் கூடிய மாகாணசபை அல்லது **எது** இனப்பிரச்சனைக்கு ஓர் நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை அதன் தலைவர்கள் இன்னும் கண்டறியவில்லை.

இதைத்தான் அனைத்துத் தமிழர்களும், அக்கறையுடைய நாடுகளும் ஏன் சிங்கள மக்களும் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அதற்கு மாற்றீடாகநாம் அனைவரும் சொல்லிக் கொள்கின்றோம் ஏதாவது ஒரு நாடு எமது பிரச்சனைக்கான தீர்வைத் தந்தால் அது தான் எமது தீர்வு என்று. இவ் எண்ணம் “பிச்சை எடுப்பவர்களுக்கு தேர்வு செய்யும் உரிமையில்லை” (Beggars' are not choosers) எனும் பழமொழியை அல்லவா எமக்கு நினைவுபடுத்துகின்றது.

அடுத்து **எவ்வாறு** எனும் கேள்விக்கு எதனை அடைய வேண்டுமோ அதற்கான கட்டமைப்புக்களை உருவாக்கிக் கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வர வேண்டும் என்பதாகும். அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள்ள மிகப்பெரும் வாய்ப்பு அவர்களால் வென்றெடுக்கப் பட்டுள்ள பிரதேச, நகர, மாநகரசபைகளும், மாகாண சபை ஆசனங்களும், பாராளுமன்ற அங்கத்துவங்களும் ஆகும்.

இவ் அமைப்புக்களின் அங்கத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் பொதுக் குறிக்கோளை விளக்கி அக் குறிக்கோளை நோக்கி நகரும் அறிவை வழங்குவதுடன் அதற்கான செயற்பாடுகளையும் உருவாக்கி விட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இவ்வாறான இயங்குமுறை (Operating System) உள்ளதா? இருக்குமெனில் அனைத்துத் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களும் தெளிவான பேச்சுக்களூடாகவும், தமது செயல்கள் ஊடாகவும் தமக்கென நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நோக்கிச் செயற்பட முனைவதைக் காணலாம்.

எது, எவ்வாறு எனும் குறிக்கோள்கள் பேசப்படும் போதும், எழுதப்படும் போதும் இலகுவான வார்த்தைகளாக இருக்கின்றன. ஆனால் அவை செயற்பாட்டிற்கு வரும் போது எவ்வாறான திட்டமிடல்கள் இருந்தால் அவை சாத்தியமாகும் என்பது பற்றித்..........

தொடர்ந்துபேசுவோம்....

**நிறுவன அமைப்பொன்றின் தந்திரோபாயத் திட்டமிடல் கட்டமைப்பின் வரிப்படம்**

நோக்கு

↑

பணிக்கூற்று

↑

குறிக்கோள்கள்
இலக்குகள்

↑

தந்திரோபாயங்கள்

குறிப்பு 1 - இக்கட்டுரைக்கென வடிவமைக்கப் பட்டதே த.தே.கூ ன் நோக்காகும். இந் நோக்கு அவ்வமைப்பின் உத்தியோக பூர்வமானதல்ல

**- யமன் -**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியச் சதுரங்கத்தில் சீனா குறிவைக்கும் அமெரிக்காவும் நேட்டோவும் . . .

தென் கிழக்காசியாவின் மிகப் பலம் வாய்ந்த நாடாக உருவாகிவரும் சீனா ஒரு வல்லாதிக்க சக்தியாக உலக அரங்கில் உருவாகிவிடுமோ என்பதே உலக மீட்பர்கள் எனச் சொல்லிக்கொள்ளும் நாடுகளின் கேள்வியாக மாறியுள்ளது. அதிலும் அமெரிக்காவிற்கு நேரடியாகவும், தந்திரோபாய இராச தந்திர நகர்வுகளாலும் தலையிடி தரும் ஓர் நாடாக சீனா மாறியுள்ளது எனக் கூறுவதே சாலச் சிறந்ததாகும்.



இராணுவத் தொழில்நுட்பத்தில் உலக வல்லரசுகளின் தொழில்நுட்பங்களைத் திருடி அவற்றின் அடிப்படையில் தனது இராணுவக் கட்டமைப்பை உறுதியாக்கிவரும் சீனாவின் நடவடிக்கைகளில் ஒன்றே கடந்த சில வாரங்களுக்கு முன் தென்மேற்குச் சீன ஆகாய வெளியில் பரீட்சித்துப் பார்க்கப்பட்ட அதன் யுத்த விமானமான J 20 – Mighty Dragon என தகவல்கள் வெளியாகின. அமெரிக்காவினதோ அல்லது இரஸ்யாவினதோ போர் விமான நுட்பங்களைத் திருடி உருவாக்கிய யுத்த விமானமாகவே இதனை மேற்குலகம் கருதினாலும் இக் கருத்துக்களை மிகவன்மையாக சீனா மறுத்துரைத்து வருகின்றது.

அமெரிக்காவும், மேற்குலகும் சீனா தமது இரகசியங்களைத் திருடுவதாக வாதிடுவதற்கு வலிதான காரணங்கள் இல்லாமலில்லை. சீனா பல தடவைகள் நேட்டோவின் கூட்டமைப்பு நாடுகளின் மீது கணணி வலைப் பின்னலூடான உளவு பார்ப்பு வேலைகளை மேற்கொண்டிருப்பதை அந்நாடுகளும், அவற்றின் பாதுகாப்புக் கட்டமைப்பில் அடங்கியுள்ள அரச, தனியார் நிறுவனங்களும் உறுதிசெய்திருந்தன. இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் உணர்திறன் (Sensitive) தகவல்களைக் கொண்ட தனது 24,000 கணணிக் கோவைகள் வேறு ஓர் அரசால் பங்குனி 2012ல் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதை அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களமான பெண்டகன் உறுதி செய்துள்ளதாக இவ் வாரத்தில் வெளியான டெலிகிராப் செய்திகள் தெரிவிக்கின்றன. இத் திருட்டில் சீனாவோ அல்லது இரஸ்யாவோ தான் ஈடுபட்டிருக்க வேண்டும் என திடமாக நம்பும் அமெரிக்கா ஒரு முத்தாய்ப்பாக சிலவேளைகளில் ஒரு பயங்கரவாத இயக்கமும் இதிற் சம்பந்தப்பட்டிருக்கலாம் எனும் சந்தேகத்தையும் எழுப்பியுள்ளது. அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சரான "லியோன் பெனட்டா" இக் கணணிவலைப்பின்னல்த் தகவல் திருட்டை அமெரிக்காவிற்கெதிரான 21ம் நூற்றாண்டின் பேர்ள் காபர் (Perl Harbor) தாக்குதலாகவே கருத்திற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

**உலக முரசு**

இத் திருட்டிற்கு பேர்ள் காபர் எனப் பெயரிட்டதனூடாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் சொல்லாமற் சொல்லும் செய்தி என்ன என்பதே இங்கு கருத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

டிசம்பர் 07 1947 ல் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தையிலீடுபட்டுக கொண்டிருக்கும் போதே முன்னறிவிப்பு ஏதுமின்றி ஜப்பானிய பேரரசால் அமெரிக்காவிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகவே பேர்ள் காபர் தாக்குதல் அமைந்தது. பெரும் ஆளணி மற்றும் வளச் சேதங்களை உருவாக்கிய இத்தாக்குதலின் விளைவாகவே அமெரிக்கா டிசம்பர் 08ல் இரண்டாம் உலகப் போரில் குதித்தது. அதே தாக்குதல் அடைமொழியை அமெரிக்கப்பாதுகாப்பு அமைச்சர் இப்போது பாவித்திருப்பதானது இத்திருட்டில் இரண்டு விடயங்களை சிந்தனைக்குத் தருகின்றது.

முதலாவதாக, நிகழ்ந்த கணணித் திருட்டின் பெறுமதி மிகப் பெரிதாகவும், அதிர்ச்சகரமானதாகவும் இருப்பதுடன் இரண்டாவதாக மேலெழுந்த வாரியாக அமெரிக்காவும் சீனாவும் பொருளாதார வர்த்தக ஒப்பந்தங்களைக் கொண்டிருப்பினும் உள்ளக உறவுகள் பரஸ்பர நம்பிக்கையற்ற தளத்திலே ஊசலாடுவதையும் சுட்டி நிற்கின்றது.

மேலும் இவ் அடைமொழியின் ஊடாக சீனா எந் நேரத்திலும் அமெரிக்காவிற்கு எதிராகவே செயற்படும் பண்பைக் கொண்டுள்ளதையும் பாதுகாப்பு அமைச்சர் கோடிட்டுக் காட்டியிருப்பதாகவே கருதலாம். அத்துடன் மாசி 2012ல் அமெரிக்க சனாதிபதியின் அலுவலக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதிகள் சபைக்கும் சீனப் பிரதிநிதிகளுக்குமிடையே எட்டப்பட்ட திரைப்பட விடயங்கள் (Film Related Issues) தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையானது (Memorandum of Understanding – MOU) ஓர் பாதகமான சூழலை அமெரிக்காவிற்கு ஏற்படுத்தியுள்ளதாகவே பெண்டகன் அறிக்கையிட்டுள்ளது. இவ்வறிக்கையின் ஓர் பந்தியானது "சீன நடிகர்கள் அரசியல் இராணுவத் தகவல்களைத் திருடுவதில் கைதேர்ந்தவர்களாக உள்ளனர்" எனக் குறிப்பிட்டுள்ளது.

சீனா தனது வருடாந்தப் பாதீட்டில் 140 பில்லியன் அமெரிக்க டொலர்களைப் பாதுகாப்புச் செலவிற்காக 2011ம் ஆண்டில் ஒதுக்கியதன் மூலம் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக பாதுகாப்புச் செலவுக்காக உயர் நிதிச் செலவைக் கொண்ட இரண்டாவது நாடாக உலகிற்கு தன்னை இராணுவ பலத்துடன் அறிமுகம் செய்துள்ளது.

இந் நூற்று நாற்பது பில்லியன் அமெரிக்க நிதி ஒதுக்கின் ஊடாக சீனா முக்கியமாகப் பெற்றுக் கொண்டிருக்கும் ஆயுத வகைகளில் குறுந்தூர விமான ஏவுகணைகள் (Medium Range Ballistic Missiles) கப்பல் அழிப்பு ஏவுகணைகள் (Anti-Ship Missiles), வானோட எதிர்ப்பு ஏவுகணைகள் (Anti-Satellite Missiles), நீர்மூழ்கிக் கப்பல்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் கணணித் தகவற் திருட்டினூடாக பெற்றுக்கொள்ளும் அறிவைக்கொண்டு முன்னேற்றகரமான வான் பாதுகாப்புத் திட்டப் பொறிமுறைகளை நிறுவும் செலவுகளையும் சீனா உள்ளடக்கியுள்ளது.

இவ் ஆயுத வகைகள் யாவும் வான், கடல் பாதுகாப்பிற்குப் பலம் சேர்ப்பதுடன் இவ்விரு பிரதேசத்தினூடாகவும் சீன நலனோம்பு பிரதேசத்தில் நாடுகள் எவையும் நுழைவதை சீனாவின் மட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் வலுவைச் சீனாவிற்கு வழங்கும். இந் நூற்று நாற்பது மில்லியன் பாதுகாப்புச் செலவுப் பாதீட்டில் அணுத்திட்டச் செலவுகளையும் (Nuclear Projects), வெளிநாடுகளிற் தயாரிக்கப்படும் ஆயுதக் கொள்வனவுச் செலவுகளையும் சீனா உள்ளடக்கவில்லை என்பதை பெண்டகன் கோடிட்டுக் காட்டியுள்ளது. இவற்றையும் சேர்த்தால் பாதுகாப்புச் செலவிற்கான சீனாவின் நிதி ஒதுக்கீடு சுமார் 180 பில்லியன் அமெரிக்க டொலராக மாற்றமடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. 2010 ம் ஆண்டின் தகவல்களின் அடிப்படையில் சீனாவின் வெளிநாட்டு ஒதுக்கானது (Foreign Reserves) 2.3 ரில்லியன் டொலர்களாக இருக்க அமெரிக்கா இப்பட்டியலில் 140 மில்லியன் டொலர் வெளிநாட்டு ஒதுக்குடன் 16வது இடத்திலிருந்தது.

சீனாவின் இம் மிகப் பெரும் வெளிநாட்டு ஒதுக்கானது பொருளாதாரச் சிக்கலில் தாழ்ந்துகொண்டிருக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை கவர்ந்திழுக்கும் செயற்பாட்டினைச் செய்துள்ளது. தமது பொருளாதார அழிவிலிருந்து மீளும் முயற்சிகளுக்கு மேற்குலகு சீனாவிடம் பேரம்பேசும் நிலைக்கு வந்துள்ளது. மாசி 2012ல் ஐரோப்பிய நாடுகளுடன் சீனா ஓர் விடுவிப்புப் (Bailout) பேச்சுவார்த்தையை நடாத்தியிருந்தது. இப்பேச்சுவார்த்தைகளின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையானது சீனா தனது அளவற்ற வெளிநாட்டு ஒதுக்குகளைக் கொண்டு ஐரோப்பிய ஒன்றிய விடுவிப்பிற்கு உதவும் எனத் தெரிவித்தது. எனினும் இதனை எவ்வாறு சீனா நிகழ்த்தப் போகின்றது என்பதும் அதற்கான நிபந்தனைகள் என்ன என்பதும் அன்றைய திகதியில் வெளியிடப்படாத புதிராகவே இருந்தது. விதிக்கப்படும் நிபந்தனைகள் சீன நலன்களை ஒருபோதும் குறையவிடாமலிருக்கும் என்பதே கண்கூடு.

மேலும் சீனா பலம் வாய்ந்த ஐரோப்பிய வர்த்தக நிறுவனங்களுடன் பொருளாதார இணைவுகளை உருவாக்கி தனது அறிவை அவ்வத்துறைகளில் மேம்படுத்துவதுடன் அம்மேம்பட்ட அறிவை தனது இராணுவப் பலப்படுத்தல்களுக்கு அடித்தளமாகப் பேணுகின்றது. இதனை உறுதிசெய்யும் முகமாக 2009 ல் ஐரோப்பிய விமான உற்பத்திக் கம்பனியான ஏர்பஸ் (Airbus) தனது ஏ 320 விமான வகை உற்பத்திக்கான உற்பத்தி வரிசையொன்றை (Production line) தான் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் சீனாவில் ஆரம்பித்தது. இதனை சீன வான்பரப்புத் தொழிற்துறைக் கூட்டுத்தாபனத்துடன் (China Aviation Industry Corporation) இணைந்த கூட்டுமுயற்சியாகவே ஏர்பஸ் உருவாக்கியது. பங்குனி மாதம் 2012 வரைக்கும் ஏ 320 வகை பயணிகள் விமானத்தின் 80 அலகுகளைப் பொருத்தியுள்ள இக் கூட்டுமுயற்சியில் பெரும்பாலான சீனத் தொழிநுட்ப வல்லுனர்கள் தொழிலாற்றுகின்றனர். இவர்களின் மூலம் பரிமாற்றப்பட்ட அறிவின் வெளிப்பாடாகவே 05ம் தலைமுறைத் தாக்குதல் விமானமான J 20 – Mighty Dragon ன் பறப்பாகக் கொள்ளமுடியும். இத்தாக்குதல் விமானமானது இரஸ்யத் தயாரிப்பான Su-27 நிகரானதாகவும் லொக்கீட் மாட்டினால் (Lockheed Martin) அமெரிக்க வான் படைக்குத் தயாரித்தளிக்கப்பட்ட F 22 - Raptor ரக தாக்குதல் விமானத்தை விட திறன்வாய்ந்ததாகவும் காணப்படுகின்றது. சீன மக்கள் விடுதலைப் படையின் (சீன இராணுவம்) வான்படைப் பிரதித் தளபதி 2009ல் அளித்த பேட்டியொன்றில் J 20 – Mighty Dragon ன் பறப்பானது சீனாவிற்கு 2017 லேயே சாத்தியமாயிருக்கும் எனக் கூறியிருந்தார். ஆனால் உண்மையில் 2012 லேயே சீன அரசினால் அது சாத்திமாக்கப்பட்டு விட்டது. எனினும் தற்போதுவரை ஐந்தாம் தலை முறை விமான எந்திரங்களுக்காக சீனா இரஸ்யாவையே நம்பியிருப்பது மேற்குலகிற்கு குறுங்கால ஆசுவாச மூச்சை விட வழிவகுக்கும். ஆனால் நீண்ட காலத்திற்கது நிலைத்திருக்காது.



கடந்த மாதத்தில் சங்காய் கூட்டிணைவு ஒழுங்கமைப்புக் குழு (Shanghai Cooperation Organization - SCO) சீனத் தலைநகர் பீஜிங்கில் ஒன்று கூடியிருந்தது. இவ்வமைப்பில் ஆறு நாடுகள் பங்காளிகளாக உள்ளன. பிரதான பங்காளிகளாக சீனாவும் இரஸ்யாவுமிருப்பதுடன் மத்திய ஆசிய நாடுகளான கஸாக்கிஜ்தான், கிர்கிஸ்தான், தஸக்கிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகியவை காணப்படுகின்றன. 2001ம் ஆண்டில் உருவாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வமைப்பின் பிரதான (வெளிப்படையான) நோக்கமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது பிராந்தியத்தில் உறுதித் தன்மையைப் பேணுவதற்காக வேண்டதகாத நிகழ்வுகளைக் களைவதும் தமக்கிடையேயான எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத்துவதும் ஆகும். எனினும் இவ்வமைப்பின் உட்கிடை நோக்கமானது பிராந்தியத்தில் அமெரிக்கத் தலைமையிலான நேட்டோ நாடுகளின் ஆதிக்கத்தை இல்லாதொழிப்பதே ஆகும்.

இக் கூட்டத்திற்கு ஆப்கானிஸ்தானிய அரச அதிபர் "விருந்தினராக" அழைக்கப்பட்டிருந்த அதேவேளை ஈரான், பாகிஸ்தான், மங்கோலியா மற்றும் இந்திய தலைவர்கள் "பார்வையாளர்களாக" அழைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவருடனும் பேச்சுக்களை நடாத்தவுள்ள இவ்வமைப்பில் இரஸ்யத் தலைவர் விளாடிமிர் புட்டின் நிகழ்த்திய உரை கவனிக்கத்தக்கதாகும். " இரஸ்யாவின் தந்திரோபாய நண்பனான சீனாவுடன் இணைந்து நாம் பெரும் நன்மைகளை நம்மிடையே பகிர்ந்துள்ளோம். மேலும் எம்மிடையேயான நம்பிக்கை அனைத்துச் செயற்பாடுகளிலும் ஒன்றிணைந்த சக்தியாகச் செயற்பட எமை மாற்றமடையச் செய்துள்ளது" என விளாடிமிர் விளம்பியுள்ளார்.

சீனா இரஸ்யாவுடனான தனது உறவை நெருக்கமாகவும் இறுக்கமாகவும் பேணும் அதேவேளை அமெரிக்காவினாலும் அதன் கூட்டுநாடுகளினாலும் கலைக்கப்படும், கைவிடப்படும் நாடுகளை தனது அணியில் திரட்டத் தயங்குவதில்லை. இத் தடத்தில் தான் ஐநாவின் மனித உரிமைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கான ஆதரவும், ஐக்கிய நாடுகள் சபையினால் சிரியாவிற்கெதிராக கொண்டுவரப்படும் தடைகளை வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி இரஸ்யாவுடன் சேர்ந்து தடுப்பதும் சீனாவால் நிறைவேற்றப்பட்டன. இவை உட்பட தற்போதைய சங்காய் கூட்டிணைவு ஒழுங்கமைப்புக் குழு கூட்டத்தில் பேசப்பட்ட இரண்டு முக்கிய விடயங்கள் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

முதலாவதாக நேட்டோவால் குழப்ப நிலையில் கைவிடப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானில் நிலையான சூழலை உருவாக்குவது தொடர்பான பேச்சுக்களை ஆப்கான் தலைவருடன் முன்னெடுத்திருந்ததுடன், இரண்டாவதாக ஈரானியத் தலைவர்களுடன் அவர்களது அணுத்திட்ட சர்ச்சையை எவ்வாறு இராசதந்திரத் தந்திரோபாயத்தினூடாக கையாளலாம் எனும் பேச்சுக்களையும் கருதலாம். இவற்றினூடாக இந்நாடுகளுடன் தனது உறவை பலமாக்கிக் கொள்ள சீனாவிற்கு வாய்ப்புக்கள் உருவாகிவிடும்.

சீனா தனது நிதிப்பலத்தாலும், இராசதந்திர நகர்வுகளிற் பின்பற்றும் தந்திரோபாயங்களாளும், அமெரிக்காவையும் அதன் கூட்டு நாடுகளையும் ஆசியப் பிரதேசத் தலையீடுகளில் ஆட்டங்காண வைத்துள்ளது என்பதே மிகைப்படுத்தப்பட முடியா உண்மையாகும். எனினும் இவ்வலுவான நிலை எவ்வெக் காரணிகளால் தலைகீழாக மாறிப் போகலாம் என்பதை மற்றோர் கட்டுரையில் நோக்கலாம்.

**- நாடோடி -**

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள்

1. 1080ml ஐ l, ml இல் தருக.
   1. 1l 80ml  2. 1l 800ml  3. 10 l 80ml

2. சதுரவடிவானஉருவின் ஒருபக்கத்தில் 11 புள்ளிகள் உண்டெனில், இவ்வுருவில் உள்ளபுள்ளிகளின் எண்ணிக்கை.
   1. 41  2. 44  3. 40

3. ஒருசதுரக்காணியின் ஒருபக்கத்தில் 8 கம்புகள் நடப்பட்டுள்ளன. ஒருகம்பின் விலைரூ200 எனில், இக்காணியைச் சுற்றிவர கம்புகளை நட எவ்வளவு செலவாகும்?
   1. 6,400.00  2. 5,200.00  3. 5,600.00

4. 10 பேரைக் கொண்ட நண்பர்கள் குழு ஒருவருக்கொருவர் ரம்ழான் வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டால்,நண்பர்களிடையே பரிமாற்றிக் கொள்ளப்பட்ட வாழ்த்துக்களின் எண்ணிக்கையாது?
   1. 9  2. 90  3. 100

5. வயல்வெளி ஒன்றின் நீளம் 8mஅகலம் 5m. அதனைச் சுற்றி 2 முறை நடக்கும் ஒருவர் நடந்தமொத்த தூரம் யாது?
   1. 56m  2.50m  3. 52m

7. ஒரு பண்ணையில் ஆடுகளும்,கோழிகளும் இருந்தன. அவற்றின் மொத்தக் கால்களின் எண்ணிக்கை 100 ஆகும். அங்கிருந்த ஆடுகள் 20 எனின், எத்தனைகோழிகள் உள்ளன.
   1. 15  2. 10  3. 30

8. காலை 7 மணியளவில் நான் பாடசாலைக்குச் செல்லும் போது எனது நிழல் எனது இடதுகைப்பக்கம் வந்ததுஎனில்,நான் எத்திசை நோக்கிச் செல்கின்றேன்?
   1. வடக்கு  2. தெற்கு  3. மேற்கு

9. 4,9,8 எனும் இலக்கங்களைக் கொண்டு உருவாக்கக்கூடிய ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண்?
   1. 948  2. 984  3. 489

10. கடிகாரத்தில் விரிகோணத்தைக் காட்டும் நேரம் எது?
   1. 1.50  2. 1.40  3. 1.10

**உங்கள் கேள்விகளுக்கு மலைமாடன் 05. 08. 2012 வெளியீட்டிலிருந்து பதில் தருகின்றார். கேள்விகளை மலைமுரசிற்கு தபாலிலோ அல்லது மின்னஞ்சலிலோ அனுப்பிவையுங்கள்.**

அனுப்பவேண்டிய முகவரி:
மலைமாடன் பதில்கள்
மலைமுரசு,
இல 159A கடல்முக வீதி,
திருக்கோணமலை.

மின்னஞ்சல்
malaimurasu@hotmail.com

பெயல் மணக்கும் பொழுதுகள் கவிதைத் தொகுப்பிலிருந்து

## சிரட்டையும் மண்ணும்

நாச்சியாதீவு பர்வீன்

நானும் நீயும்
ஓடிப்பிடித்து விளையாடிய
ஒற்றையடிப்பாதை
காடு பத்தி...
காணாமல் போயிருந்தது.

சலசலத்து
சங்கீதம்பாடி
ஊரின் நடுவால்
ஊடறுத்து ஓடிய
ஆறுகள் இரண்டும்
அடையாளமற்றுப் போயிருந்தன.

ஊஞ்சல் கட்டி ஆடிய
எல்லைப்புற ஆலமரம்
எப்படி மறைந்தது...
சுவடுகளற்று...
கறையானும் பாம்பும்
வாழ்வதற்காய்...
புதிதாக அங்கே
'புத்து'கள் முளைத்திருக்கின்றன.

ஊர்பற்றிய
ஒவ்வொரு நினைவும்
ஊசியாய் குத்தியது மனசை!

திரும்பிடும்
திசைகள் தோறும்
நமதான ஞாபகங்கள்
கை காட்டி முறுவலிக்கிறது

கிட்டி, கிளித்தட்டு
பட்டம், பம்பரம்
மறந்துபோன விளையாட்டுக்கள்
மறுபடியும்
ஞாபகம் வந்தது.

மயானத்தை
நினைவூட்டுவதாய்
நமதான...
அழகிய கிராமம்

அழுக்காகிப் போன
நினைவுகளை...
தூசுதட்டி, துடைத்து
வாசிக்கையில்
அழுகை வந்தது.

தூரத்தில் சிரட்டையும் மண்ணும்
சிதறிக் கிடந்தன...
விளையாட ஆருமில்லாமல்!

## சகுனம்

சா.ஜெயந்தி

எனது வீடுகளுக்கு ஒரே முற்றம்
பெரிய முற்றம்
முற்றத்தின் நடுவிலே
ஓர் மாமரம்
மாமரக்குடையின் கீழ் - என்
அப்பா சாக்கு கட்டிலிலே


படம்:கூகுள்

மாலைச்சூரியனும் களைத்து விட்ட நேரம்
தூ...தூ... சுடலைக்குருவி
நாயின் ஊளைச் சத்தமும்
ஏதோ துக்கறி என்று...
சொன்னது போலவே
அயல் வீட்டில் மரணம்,
ஆனால்... இப்போ...
சுடலைக்குருவியும் நாயும் காகமும்
களைக்காமல் கத்தும்
நாளாந்தம் துக்குறிதான்

மாபெரும் திட்டங்களின் போது, மாபெரும் பதற்றங்களின்களின் போது, மாபெரும் படைப்புக்களின் போது எது தேவையென்றால்
மாபெரும் எதிர்காலம் மாபெரும் குறிக்கோள்களும் - சேகுவேரா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைவதால் உறுதியாகுமா தமிழ் முஸ்லிம் சிறுபான்மை இனங்கள்?

நடைபெற இருக்கின்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மாகாண சபையை எந்தக்கட்சி கைப்பற்றப் போகின்றது? அல்லது எவர் முதலமைச்சராகப் போகின்றார்? என்ற பல்வேறுபட்ட அலாவு தல்களையும், வீரியமான தேர்தல் பிரச்சார கருத்துக்களையும் புறந்தள்ளி விட்டு வரலாற்று மாற்றமொன்றை நோக்க வேண்டிய தேவை தற்போது எமக்கு எழுந்திருக்கின்றது.

அனைத்தின மக்கள் வாழுகின்ற இந்தத் தீவுக்குள் பிரதான மூவினங்களின் மத்தியில் காலங்காலமாய் இருந்துவரும் விரிதல்கள் எந்தக் காலத்திலும் சரி செய்யப்பட்டதாகவோ அல்லது சரி செய்யப்படும் நிலைக்கு நேர்த்தியான முறையில் எடுத்துச் செல்லப்பட்டதாகவோ முடிவுகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. ஆனால் மூவினங்களும் ஏதோ ஒரு வகையில் தங்களுக்குள் முரண்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பது மட்டும் உண்மை.

## நடப்பு முரசு

பெரும்பாண்மைச் சிங்களவர்களுக்கும் பிரதான சிறுபான்மையினர் என்று சொல்லப்படும் தமிழ் பேசக்கூடியவர்களுக்குமான போராட்டம் அகிம்சை– ஆயுதம் என்று இன்று மீண்டும் அகிம்சை நிலையைவந்தடைந்துள்ள நிலையில் சிறுபான்மையினரான தமிழர்களும், முஸ்லிம்களும் ஒன்றுபட வேண்டிய கட்டாயத்தை காலமே தற்போது நிர்ணயித்துக் கொடுத்துள்ளது.

முப்பது வருடகால தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டம் தேசியத்தை தாண்டி சர்வதேச பிரச்சனையாக என்றோ மாறியுள்ள நிலையில் இலங்கையில் தமிழர்கள் யார் என்பதை சர்வதேசத்துக்கு உணர்த்த வேண்டிய தேவை எம்மைச் சார்ந்திருக்கின்றது.

சிறுபான்மையினர் என்ற பதத்துள் காணப்படுகின்ற தமிழர்கள் மற்றும் முஸ்லீம்கள் ஆகிய இனங்கள் இதுவரை காலமும் இன ரீதியாக தங்களை வேறுபடுத்திக் கொண்டதும் இவ்வினங்களிடையே அவ்வப்போது ஏற்பட்டு வந்த கசப்புணர்வுகள் தமிழர்கள், முஸ்லீம்கள் என்ற பிரம்மாண்டமான இனப்பிரிவினைக்குள் தள்ளப் பட்டதும் தவிர இருவருமே தம் நிலை தொடர்பாக சிந்தித்திருக்கவில்லை.

இவ்விடத்தில் தான் நாம் அனைவரும் அழுத்தம் திருத்தமான ஒரு உண்மையை தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

சமய அடிப்படையில் இந்துக்கள், இஸ்லாமியர்கள் என பாகுபடுத்தப்பட்டாலும் மொழியின் அடிப்படையில் தமிழை தாய்மொழியாக பயன்படுத்தக்கூடிய அனைவருமே தமிழர்களா கத்தான் கருதப்படுகிறார்கள். இதனடிப்படியில் பார்த்தால் இலங்கையின் சிறுபான்மையினர் எனப்படும் பதம் தமிழ் பேசக்கூடிய அனைவரையுமே உள்ளடக்கி விடுகின்றது. இன்னும் விளக்க முற்படுவோமேயானால் சிங்களம் பேசக் கூடியவர்களை சிங்களவர் என்று குறிப்பிடப்படும் நிலையில் நான் மேற் சொன்ன கருத்துக்கள் பொருத்த முடையனவாகின்றன.

இவ்வாறான வாதப்பிரதிவாதங்களை கடந்து இன்று கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ், முஸ்லீம் மக்களின் உறவு மேலும் பலமடையும் வாய்ப்புக்கள் அமைவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

இத் தேர்தலில் தமிழ்தேசிய கூட்டமைப்புடன் இணைவதா இல்லையா என்ற முஸ்லீம் காங்கிரஸின் யோசனையே சிறுபான்மையினரின் ஒற்றுமைப் பலத்தை உறுதிப்படுத்தியதாய் அமைந்தது.

எனினும் தேர்தலில் தனித்துக் களமிறங்கும் முஸ்லீம் காங்கிரஸ் தமிழ் தலைமைகளோடு கொண்டுள்ள தொடர்பாடல்கள், ஒத்திசைவுகள், பொது இடங்களில் தமிழ்தேசிய கூட்டமைப்பினதும், முஸ்லீம் காங்கிரசினதும் முக்கியஸ்தர்களின் வெளிப்படையான அப்பழுக்கற்ற பேச்சுக்கள் இரு சமுதாயமக்களிடமும் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன.

இந்தவகையில் கடந்தவாரம் பத்திரிகையொன்றுக்கு பேட்டியளித்த முஸ்லீம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹஸன் அலியினது சில சொல்லியல் வெளிப்பாடுகள் நோக்கத்தக்கனவாக உள்ளன.

"கிழக்கு மாகாணம் என்பது வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்றும் தமிழ் மக்கள் எமது சகோதரர்கள், அவர்களுடன் நாங்கள் ஒன்றாக வாழவேண்டும். நமது இனங்களை வழிநடத்திய ஒருசில தலைவர்களால் நாம் எமக்குள் பகைத்துக் கொண்ட வரலாறுகள் உண்டு. ஆனால் அவை இனி எழப் போவதில்லை" என்ற கருத்துக்கள் தமிழ், முஸ்லீம் மக்களிடையே இதுவரை இருந்து வந்த கசப்புக்களை மறக்கடிக்கச் செய்வதற்கான தொடக்கநிலை வார்த்தைப் பிரயோகங்களாக கொள்ளப்படலாம். மேலும் "தமிழ் தலைவர்கள் முஸ்லீம்கள் ஏற்கக்கூடிய உச்சக்கட்டத் தீர்வைத் தரக்கூடிய கடப்பாட்டில் உள்ளனர்" என்ற அவருடைய கருத்தும் ஒன்றுபட்ட தமிழ்த் தேசியப் பாதையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது என காட்டுவதாயும் அமைகின்றது.

இது மட்டுமின்றி "நாட்டின் இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வை கொண்டுவராவிடின் நிலைமை ஆபத்தாகவே முடியும்" என்று ஹஸன் அலி மேலும் கூறியிருப்பது இதுவரைகால சிறுபான்மையினமக்களின் உரிமைப்போராட்டத்தை ஞாயப்படுத்துவதாகவும் அமைகின்றது. இதேவேளை அரசுடன் இணைந்து தேர்தலில் பங்கு பெறாமல் தனியாகப் போட்டியிடுவதற்கு முடிவெடுத்த முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூவ்ஹக்கீமுக்கும், அவரதுகட்சிக்கும் தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இம்முடிவு சம்பந்தமாக பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டமை இரு கட்சிகளும் ஒன்றாய் இணைந்து இயங்குவதற்கான முதற்கட்ட விளிம்பு நிலையில் உள்ளன என்பதை எமக்கு வெளிப்படையாய் உணர்த்துகின்றன.



அத்தோடு அண்மையில் கொழும்பு தமிழ் சங்கத்தில் நிகழ்வொன்றில் கலந்துகொண்ட முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தமிழ் தலைவர்களின் வரலாற்றிலிருந்து முஸ்லீம் சமூகம் பாடம் கற்க வேண்டுமென்ற தொணிப்பை வெளியிட்டார்.

"தமது உரிமைகளை பெறுவதற்காக பல தியாகங்களை செய்த தமிழ்த் தலைமைகளின் மத்தியில் எங்களை நாங்களே உரசிப்பார்த்து பாடம் படிக்க வேண்டும்" என அவர் கூறியிருப்பது கிழக்குமாகாணத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்புடன் இணைவதற்கான சாத்திய சந்தேகங்களையும் எழுப்பியுள்ளது. உண்மையில் இந்த இடத்திலொன்றை சொல்லியாக வேண்டும் அண்மைக் காலமாக ரவூப் ஹக்கீம் அவர்கள் அரசின் நீதியமைச்சர் என்பதை மறந்து முஸ்லீம் காங்கிரஸின் தலைவராக செயற்படுவதும், மாமனிதர் அஸ்ரப் அவர்களின் - "எனது வீடா கட்சியா எனும் போது கட்சி என்பேன் - கட்சியா சமூகமா எனும் போது -சமூகம் என்பேன்" என்ற ஆழ் அரசியல் சொற்களை நினைவு படுத்துவதாகவும் அமைகின்றது.

இவ்வாறு வரலாற்றுப் பக்கங்களைக் கடக்கின்ற தருணத்தில் இரு இனத் தலைமைகளின் அண்மைக்கால செயற்பாடுகளுக்கு எதிரான கருத்துக்கள் மக்கள் மத்தியில் இல்லாது விட்டாலும் மக்களை வழி நடத்துகின்ற ஒரு சில தலைவர்களிடையே காணப்படுவது வருந்தத்தக்கதே.

உதாரணமாக "முகவரி இழந்துள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பு இனவாதத்தை தூண்டு வதாக" தேசியகாங்கிரஸ் தலைவரும் மாகாண சபைகள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா அண்மையில் தெரிவித்த கருத்தும், "அரசுடன் இணைந்து முஸ்லீம் காங்கிரஸ் தமிழர்களைக் காட்டிக்கொடுத்துவிட்டது" என்ற யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் கருத்தும் மக்கள் மத்தியில் தாக்கமெதனையும் ஏற்படுத்தவில்லை.

எனினும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அரசுடன் ஏற்பட்ட ஆசனப்பகிர்வு தொடர்பான முரண்பாடு காரணமாகவே முஸ்லீம் காங்கிரஸ் தனித்துக் களமிறங்குகிறது என்றும் அநுராதபுரம், கொழும்பு, தம்புள்ள, குருநாகல் ஆகிய இடங்களிலுள்ள பள்ளிவாசல்கள் தாக்கப்படடிருக்காவிடில் முஸ்லீம் மக்கள் அரசுடன் இணைந்த முஸ்லீம் காங்கிரசுக்கே ஆதரவை வழங்கியிருப்பார்கள் என்றும் மக்களிடையே ஏற்பட்டுள்ள எதிர்மறையான கருத்துக்களுக்கு தேர்தல் முடிவில் முஸ்லிம் காங்கிரசினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்தால் கிழக்கில் சிறுபான்மையினங்களின் உரிமைகளை வலிதாக்கப் போகின்றார்களா? அல்லது மீண்டும் அரசுடன் சோரம் போகப் போகின்றார்களா? என்ற அவர்களின் முடிவே பதிலாய் அமையும் என்று நினைக்கின்றேன்.

ஒட்டுமொத்தமாய் நோக்குமிடத்து கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் முஸ்லிம் மக்களுடைய ஏக வாக்குகளை முஸ்லிம் காங்கிரஸ் பெறுவதும், தமிழ் மக்களுடைய ஏகவாக்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெறுவதும் பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. இவ்விரு சிறுபான்மைக் கட்சிகளும் இணைந்து ஆட்சியமைக்குமானால் கிழக்கு மாகாண சபை பலம் வாய்ந்த அதிகார அலகாக மாறுவதுடன், தமிழர்களுக்கான தனி நிர்வாக அலகுகளை செயற்படுத்தவும் ஆரம்பிக்கும் என்பதும் மறுதலிக்க முடியாத உண்மை.

சிறுபான்மையினரின் தம்முள்ளான ஒற்றுமை, பரஸ்பர விட்டுக்கொடுப்பு, நம்பிக்கை, என்பவை கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்குப் பின் புதிய அரசியல் அத்தியாயம் ஒன்றை இலங்கையில் தோற்றுவித்து சிறுபான்மையினர் அரசியலை இனியாவது சரியான பாதைக்கு இட்டுச் செல்லும் என்ற நம்பிக்கையுடன் இக் கருத்தாடலை நிறைவு செய்கின்றேன்.

**- அரஃபாத் -**

**விளைவுகளை ஏற்படுத்தாத வார்த்தைகள் முக்கியமற்றவை** - சேகுவேரா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Leader

### மது மயக்கத்தால் தொழில் இழந்தனர் ஒன்பது காவல் துறையினர்

கிரியுள்ள காவல்துறைப் பிரிவில் கடமையாற்றும் ஒன்பது காவல்துறையினர் கடமை நேரத்தில் மது அருந்தியதற்காக கடமை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

### பிரதியமைச்சர் முரளீதரனுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத்தாக்கல்

இறால்ப் பண்ணைத் தொழிற்சாலையொன்றை கொக்கட்டிச் சோலையில் உருவாக்கித் தொழில் நடத்தும் முயற்சியில் ஈடுபட்ட கம்பனியொன்றின் பங்குதாரரான பிரதியமைச்சர் முரளீதரனுக்கு எதிராக ஏனைய இரு பங்குதாரரும் வழக்கொன்றை கொழும்பு நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளனர்.

### அபிவிருத்தியின் பெயரால் அகற்றப்பட்ட சம்பூர் மக்கள்

மீயுயர் நீதிமன்றில் சம்பூர் மக்கள் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளனர். தமது வாழ்வாதாரக் காணிகளை சட்டவிரோதமாக அபிவிருத்தியின் பெயரால் அபகரித்துக் கொண்டமைக்கு எதிராகவே இம் மனுத்தாக்கல் நிகழ்ந்துள்ளது.

இவ் அபிவிருத்தித் திட்டத்திற்கான நிறுவனத்தின் தலைவரும் இத் திட்டத்திற்கான தலைவருமான பிரபாத் நாணயக்காரா தெரிவிக்கையில் " இக் காணிகள் அரசகாணிகளாகும். அவை அரசிடமிருந்து முதலீட்டுச் சபையால் குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் அவற்றை முதலீட்டுச் சபையிடமிருந்து நாம் குத்தகைக்குப் பெற்றுக்கொண்டுள்ளோம். அக்காணிகளுக்கான உறுதிகள் பொய்யானவை" என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமானசுமந்திரன் உறுதிகள் தொடர்பான இக் கூற்றைஅடியோடுநிராகரித்ததுடன் அக்காணிகளுக்கானஉறுதிகள் 100 வருடங்களுக்கும் மேல் பழமைவாய்ந்தவைஎனக் கூறினார்.

## Sunday Observer:

### சர்வதேச நாணய நிதியம் 415 மில்லியன் அமெ.டொலர்களை இலங்கைக்கு வழங்க இருக்கின்றது.

இலங்கையின் பொருளாதார விருத்தியினை உறுதிப்படுத்திக் கொண்டு சர்வதேச நாணய நிதியம் 2.6 பில். அமேரிக்க டொலர் வசதியின் இறுதிக்கொடுப்பனவான 415 மில்லியன் அமெ.டொலர்களை இலங்கைக்கு வழங்க இசைந்துள்ளது.

### வயதடையாத பிள்ளைகள் உல்லாச விடுதிகளுக்குள் அனுமதிக்கப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையானது வயதடையாப் பிள்ளைகள் அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலறற்ற ஏனைய எவருடனும் விடுதிகளுக்கோ உல்லாசக் கொட்டகைகளுக்கோ அனுமதிக்கப்படுவதைத் தடைசெய்துள்ளது. நாட்டில் அதிகரித்துவரும் குழந்தைகளுக் கெதிரான வன்முறைகளை தடுக்கும் ஓர் நடவடிக்கையாக இத்தடை அமுலாக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலைச் சீருடையுடன் படமாளிகைக்கோ, உல்லாசக் கூடங்களுக்கோ வருபவர்கள் மீது கூடியகவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் அதிகாரசபை உரியவர்களிடன் கோரியுள்ளது.

### வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 2.2 பில்லியன் ரூபாய்கள்

அரசாங்கம் வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 2.2 பில்லியன் ரூபாய்கள் மானியத்தை வழங்க அனுமதியளித்துள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் மகிந்தயாப்பா அபெயவர்த்தன தெரிவித்துள்ளார். அத்துடன் இவ்விவசாயிகள் பெற்றுள்ள கடன்களின் மீள் கொடுப்பனவுக் காலத்தையும் அரசு பிற்போட்டுள்ளதாக அவர் கூறினார்.

### மத்தள வானூர்தி நிலையம் 2012ன் இறுதியில் செயற்படத் தொடங்கும்

ஹம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வானூர்தி நிலையம் 2012ன் இறுதியில் செயற்படத் தொடங்கும் என வானூர்தி நிலைய மற்றும் வான்பறப்பு அதிகாரசபைத் தலைவர் தெரிவித்தார். இந் நிலையம் 60வீத சரக்குகளையும் 40வீத பயணிகளின் போக்குவரத்தையும் கையாளும் ஆற்றலைக் கொண்டமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

## The Sunday Times:

### பல பில்லியன் ரூபாய்கள் ஹையாட் ரெஜென்சி ஹொட்டல் திட்டத்தால் இழப்பு

அரச பின்புலத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஹையாட் ரெஜென்சி ஹொட்டல் திட்டத்தில் 4.2 பில்லியன் ரூபாய்களுக்கு விற்கப்பட்ட செலிங்கோ ஸ்ரீராம் நிறுவனத்திற்கு உரிமையான சொத்தின் உண்மைப் பெறுமதி 9.2 பில்லியன் ரூபாய்கள் ஆகும். இச் சொத்து அரசினால் "திறனற்ற முறையில் இயங்கும் நிறுவனங்களைக் கையேற்றல்" என்ற அடிப்படையில் செலிங்கோ ஸ்ரீராம் நிறுவனத்தைக் கையேற்ற போது கையகப்படுத்தப்பட்ட சொத்தாகும். அத்துடன் இச்சொத்தினைக் கொள்வனவு செய்வதற்கு 7.8 பில்லியன் ரூபாய்களுக்கு கேள்வி இருந்த போதிலும் வெறும் 4.2 பில்லியன் ரூபாய்களுக்கே இச் சொத்து விற்கப்பட்டுள்ளது.

### சர்வதேச நாணய நிதியம் தனது இறுதி உதவித்தொகையை விடுவிக்க அனுமதித்துள்ள போதும் இலங்கை அரசு மேலும் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை கோரவுள்ளது.

நீட்டிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் சர்வதேச நாணய நிதியத்திடம் மேலும் 65.8 பில்லியன் ரூபாய்களைக் கடனாகப் பெற்றுக்கொள்ளும் பேச்சுவார்த்தைகளை செப்டெம்பர் மாதத்தில் அரசு மேற்கொள்ளும் என மத்திய வங்கியின் ஆளுனர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். செம்டெம்பர் மாதத்தில் ச.நா. நிதியம் இலங்கைப் பொருளாதாரம் தொடர்பான வருடாந்த மீள்பார்வையை மேற்கொள்ளும் வேளையில் இச் சம்பாசனை சாத்தியப்படலாம் என அவர் தெரிவித்தார்.

### இரகசிய சுவிஸ் வங்கிக் கணக்குகள் தொடர்பாக விசாரணையை மேற்கொள்க!

சுமார் 85 மில்லியன் அமெரிக்க டொலர்களை (11.2 பில்லியன் ரூபாய்கள்) சுவிஸ் வங்கியில் இரகசியக் கணக்குகளிற் பேணும் இலங்கையர் தொடர்பான விசாரணைகளை எடுக்கவேண்டும் என எதிர்கட்சியினரும் சமூக ஆர்வலர்களும் வேண்டுகோள் விடுக்கத் தொடங்கியுள்ளனர்.

### நீதிபதிக்கு மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பான தகவல்களைப் பொறுக்கும் இரகசிய புலனாய்வுப் பிரிவு (இ.பு.பி)

மன்னார் மாவட்ட மேலதிக நீதிபதிக்கு தன்னை அமைச்சர் ரிசாத் பதியுதீன் என அடையாளம் காட்டப்பட்டவரால் விடுக்கப்பட்டாதாகக் குற்றம் சாட்டப்பட்ட தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பான சான்றுகளை இ.பு.பிரிவு" தொழில்நுட்ப ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும்" பொறுக்கத் தொடங்கியுள்ளது. அமைச்சர்தான் எச்சந்தர்ப்பத்திலும் நீதிபதிக்குத் தொலைபேசி அழைப்புக்களை மேற்கொள்ளவில்லை என மறுத்துரைத்திருப்பதுடன் நீதிமன்றத் தாக்குதலுக்கும் தனக்கும் எவ்விதமான தொடர்புகளுமில்லை எனவும் Sunday Timesக்குத் தெரிவித்திருந்தார்.

### சுனாமி உதவித் தொகையாகக் கிடைத்த பெரும் தொகையை தனது தனிப்பட்ட கணக்குகளில் வைப்பிலிட்ட ரூபவாகினி!

சுனாமி நிதியாகக் கிடைத்த பெரும் பணத்தை அதற்கென உருவாக்கப்பட்ட சனாதிபதி நிதியத்திற்கு அனுப்பாமல் தனது தனிப்பட்ட வங்கிக் கணக்குகளில் ரூபவாகினிக் கூட்டுத்தாபணம் வைப்பிலிட்டுச் செலவு செய்து வந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பொது நிறுவனங்கள் மீதான தணிக்கைக்குழு (Committee on Public Enterprises- COPE)வின் அங்கத்தவரான எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் "சட்டபடியான உயர்தரக்களவு" என இதனைக் குறிப்பிட்டார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமலைத் தேர்தல் களத்தில்....**
விபரங்களும் வருமாறு:

1. அகில இலங்கை தமிழ் ஐக்கிய முன்னணி
2. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
3. ஈழவர் சனனாயக முன்னணி
4. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு
5. ஐக்கிய தேசியக் கட்சி
6. எக்ஸத் லங்கா மகா சபா
7. ஐக்கிய சோசலிசக் கட்சி
8. மக்கள் விடுதலை முன்னணி
9. ஜன செத பெரமுண
10. தேசிய சுதந்திர முன்னணி
11. தேசப்பற்றுடைய தேசிய இயக்கம்
12. முஸ்லிம் விடுதலை முன்னணி
13. ருகுணு ஜனதா கட்சி
14. ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி
15. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
16. சோசலிசக் கூட்டணி

இப் பதினாறு கட்சிகளுக்குள்ளும் சுமார் 5 கட்சிகள் சிறுபான்மையினத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன.. அத்துடன் பெரும் அரசியற்கட்சிகள் யாவற்றிலும் சிறுபான்மையினப் பிரதிநிதிகளின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**வாக்காளர் அட்டைக்கு...**

மாகாண சபைத் தேர்தல்களுக்கான வாக்காளர் அட்டைகளின் வினியோகம் ஆரம்பிக்கப்படும் எனவும் தேர்தல்கள் செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு ஆகஸ்ட் 26ம் திகதி வாக்காளர் அட்டை வினியோகத்திற்கான விசேட தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் செயலகச் செய்திகள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

**ஐம்பத்தைந்து சுயேட்சைக் குழுக்கள்...**

ஏனைய இரு மாகாணங்களான சப்ரகமுவாவில் இரண்டு மாவட்டங்களில் 19 சுயேட்சைகளும் வடமத்திய மாகாணத்தில் இரண்டு மாவட்டங்களில் 10 சுயேட்சைகளுமே தேர்தலுக்குக் களமிறங்கியுள்ளன.

கட்சிகளின் பெயராலும் சுயேட்சைக் குழுக்களின் பெயராலும் வாக்குச்சீட்டை நிரப்பும் போது வாக்காளர்கள் குழம்பிவிடும் வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன. இதனால் வாக்குச்சீட்டுக்கள் நிராகரிக்கப்பட்டுவிடும் ஆபத்துடன் வாக்களிப்பு வேறு கட்சிக்கோ அல்லது சுயேச்சைக் குழுவிற்கோ போய்விடும் அபாயமும் இருக்கின்றது.

சிறுபான்மைக் கட்சிகள் தமது வாக்களரிடையே தமது சின்னங்களையும், எண்களையும் ஆழப் பதிந்தால் மட்டுமே வாக்குகள் சிதறடிக்கப்படாமல் இருக்கும்.

**உளவியல் யுத்தத்திற்குப்....**

மேலும் தந்திரோபாய உளவியல் யுத்தமொன்றும் தமிழ் வாக்காளர்களை குறிவைத்து ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அதற்கு துணைபோகும் மனிதர்கள் மாகாண சபை வேட்பாளர்கள் தேர்வுக்கு விண்ணப்பித்து சிறுபான்மைக் கட்சிகளால் நிராகரிக்கப்பட்டவர்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இத் தந்திரோபாய உளவியல் யுத்தத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராகவே பெருமளவு புரளிகளும் வதந்திகளும் கிளப்பி விடப்பட்டுள்ளதாக கூறிய அவர் இவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக தமிழ் வாக்காளர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தி வாக்களிக்க விருப்பமற்ற தன்மையை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே தமிழ் வாக்காளர்கள் இவ்வாறான புரளிகளையிட்டு மிக அவதானமாக இருப்பதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உண்மை ஆதரவாளர்களை அடையாளம் கண்டு அவர்களிடம் இப் புரளிகள் சம்பந்தமான உண்மை நிலையைத் தெளிவுபடுத்திக் கொள்ளுமாறும், அவ்வாறே ஏனைய சிறுபான்மைக் கட்சிகளுக்கு எதிராக மேற்கொள்ளும் வதந்திகளையும் அவ்வக் கட்சிகளின் உண்மையாதரவாளர்களிடம் கலந்தாலோசித்து உண்மை நிலையைச் சிறுபான்மையினர் கண்டறிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் கோரினார்.

**அதியுயர் வெப்பநிலையில்...**

இதன் காரணமாக திருக்கோணமலை மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசச்செயலாளர் பிரிவுகளிலும் கடும் வெப்பம் உணரப்பட்டிருப்பதுடன் மூதூர் பிரதேசத்தின் பாட்டாளிபுரம், நல்லூர், கிளிவெட்டி, பள்ளிக்குடியிருப்பு போன்ற இடங்களும், கிண்ணியாவில் சுக்கான்குழி, கண்டல்காடு ஆயிலியடி போன்ற இடங்களிலும் குடிநீர்நிலைகள் வற்றிப்போய் அருந்தும் நீருக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாடளாவிய ரீதியில் விவசாயத்தை இவ் வரட்சி பாதித்திருப்பதால் எதிர்வரும் காலங்களில் அரிசிக்கும் மரக்கறி வகைகளுக்கும் விலைகள் அதிகரிக்கும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

## *வேலை வாய்ப்புக்கள்:*

**Luxuries Hotel:**

**55 அறைகளைக் கொண்ட ஹொட்டல் ஒன்றிற்குப் பின்வரும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன:**

Pastry Cook / Cook/ Stewards/ Room Boys/ Receptionist

**தொடர்புகளுக்கு: 0723532112 0770851821**

Citizens Development Bank – CDB

**சிரேட்ட சந்தைப்படுத்தல் அலுவலர், சந்தைப்படுத்தல் அலுவலர், பயிற்சி சந்தைப்படுத்தல் அலுவலர்கள்**

**அறவீட்டு அலுவலர்கள்.**

**விண்ணப்பிக்கும் இறுதித்திகதி – 01.08.2012**

**சர்வோதயம்**

Project manager – (திட்ட முகாமையாளர்) – மட்டக்களப்பு , Senior Finance Officer – (சிரேட்ட நிதி அலுவலர்) – திருகோணமலை, Logistics Officer – மட்டக்களப்பு, Logistics Assistants – மட்டக்களப்பு, திருகோணமலை, Driver (சாரதி) திருகோணமலை. முடிவுத்திகதி இன்றாயினும் இலத்திரனியல் அஞ்சலூடாக விண்ணப்பிக்கக் கூடியதாய் இருப்பதால் pd@sarvodaya.org எனும் முகவரிக்கு இன்றே விண்ணப்பியுங்கள்.

**ESOFT**

Lecturers / Asst. Lecturers/ Instructors / Tutors – **விரிவுரையாளர்கள் - உதவி விரிவுரையாளர்கள்.**
**கல்வித்தகைமை : கணனிக்கல்வியில் பட்டப்படிப்பு அல்லது டிப்புளோமா**

Receptionist / வரவேற்பாளர், Student Counselors / மாணவ ஆலோசகர்கள்
**விண்ணப்பிக்கும் இறுதித்திகதி – 01.08.2012**







இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் திருகோணமலை வித்தியாலயம் வீதியில் 59ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டலில் இல் 29. 07. 2012ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org